# யாழ்ப்பாணம் மாநகரசபை தேர்தல் திகதி:

Registered as a Newspaper in Ceylon ★ ✱ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 306
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 19 ஜ. ஆகிர். 30 வியாழக்கிழமை [5-10-67]

## பிரதமர் திரும்புமுன் வெளியாகாது

கொழும்பு, புதன்

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் நடத்துவதற்கான திகதி, வெளிநாடு சென்றிருக்கும் பிரதம மந்திரி நாடு திரும்புவதற்கு முன்னர் அறிவிக்கப்படமாட்டாது என்று இப்பொழுது அறியப்படுகின்றது.

இதற்குக் காரணம், தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்க் காங்கிரஸ்கட்சிக்கும் இடையில் மார்ட்டின் கமிஷன் அறிக்கை சம்பந்தமாக ஏற்பட்டுள்ள கருத்துவேறுபாடுகளே எனத் தெரிகின்றது.

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா நாடு திரும்பியதும் இரு கட்சிப் பிரமுகர்களும் அவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதம மந்திரி, யாழ்ப்பாண மாநகர

[6-ம் பக்கம் பார்க்க]

# வடக்கால் உணவு பொருட்கள் கடத்தப் படவில்லை

## இங்கு தேவைப்படுவதே ஆனையிறவால் வருகின்றது

## பொலிஸ் அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மூலமாக உணவுப் பொருள்கள் கள்ளக்கடத்தல் செய்யப்படுவதாக இதுவரை தமக்கு எவ்வித ஆதாரபூர்வமான தகவலும் கிடைக்கவில்லையென வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர்.சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இங்கு சாதாரணமாகத் தேவைப்படும் உணவுப் பொருள்களே இலங்கையின் மற்றப்பகுதிகளிலிருந்து ஆனையிறவைக்கடந்து கொண்டுவரப்படுவதாகவும் திரு.சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்குமாகாணங்களிலிருந்து தென்னிந்தியாவுக்கு சட்டவிரோதமாக அரிசி மற்றும் உணவுப் பொருட்கள் கடத்தப்படுவதாகசெய்திகள்வெளியாவது சம்பந்தமாக நமது நிருபர் அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இதுசம்பந்தமான பூரண அறிக்கையொன்றை வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு நேற்றுக்காலை அனுப்பிவைத்துள்ளார். அண்மையில் இங்கு கள்ளக்கடத்தலில் பிடிக்கப்பட்ட பொருள்களில் அரிசி, பால்மா போன்ற உணவுப் பொருட்கள் பொலிசாரால் கைப்பற்றப்படவில்லையென்றும், இதனுல் இங்கிருந்து

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்

## ரூ. 25,000 ஜவுளிகள் கைப்பற்றப்பட்டன

— நமது நிருபர் நவரத்தினராசா —

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்திலுள்ள ஜவுளிக்கடையொன்றில் ரூ. 25,000 பெறுமதியான ஜவுளிகளை கள்ளக் கடத்தல் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிசார் கைப்பற்றினர்.

348 சேலைகள், 120 பட்டு வேட்டிகள். 100 செயற்கைப் பட்டுவேட்டிகள் ஆகியன பொலிசாரால் கைப்பற்றப்பட்ட ஜவுளித் தினுசுகளாகும்,

கள்ளக்கடத்தல் தடுப்பு பகுதி உதவி இன்ஸ்பெக்டர் திரு. சிறிவர்த்தன தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டியே இவைகளைக் கைப்பற்றியது,

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள பிரபல கடையொன்றிலே இப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன,

இதுசம்பந்தமாக மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண சுங்க இலாகா அதிகாரி திரு. கே. கந்தசாமி இது சம்பந்தமாக விசாரணை செய்கிறர்.

## 'இடமாற்ற சபையில் ஆசிரியரும்இருக்கவேண்டும்'

யாழ்ப்பாணம், வியாழன்

ஆசிரியர்களின் இடமாற்றச் சபைகளில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை கண்டிப்பாக இடம்பெறச்செய்ய வேண்டுமெனவும், ஆசிரியர்களின் சகல உரிமைகளிலும் அரசாங்கம் அசிரத்தையாயிருப்பதை யிட்டுக கட்டிப்பதெனவும் கோரும் தீர்மானங்கள் ஸ்ரீ லங்கா ஜாதிக குரு சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் கூட்டத்திற்கு திரு. வ. கிருஷ்ணபிள்ளை தலைமை வகித்தார்.

திறைசேரி சுற்றறிக்கையின்படி தொழிற்சங்கங்களின் முக்கிய உறுப்பினர்கள் அந்தந்த தொழிற் சங்கங்களுக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்க வசதி வழங்கப்பட்டுள்ளபோதிலும் வட

[6-ம் பக்கம்பார்க்க]

## வைத்தியஅதிகாரி நியமனம்

யாழ்ப்பாண்ம், வியா.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியின் புதிய வைத்திய அதிகாரியாக டாக்டர் திரு. ரி. சண்முகநாதன் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். [ந. நி]

## சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஜக்கார்த்தா, ஒக். 4

கிழக்கு யாவாவிலும், வடக்கு சுமாத்திராவிலும் சீன எதிர்ப்பு [illegible] நிகழ்ந்துள்ளதாக ஜக்கார்த்தாவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மலேசியாவில் டட்லிக்கு மகத்தான வரவேற்பு

கோலாலம்பூர், அக். 4

இலங்கை பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று கோலாலம்பூர் விமானநிலையத்தில் வந்து இறங்கியபோது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மலேசிய பிரதம மந்திரி துங்கு அப்துல் ரஹ்மான் மற்றும் மந்திரி பிரதானி

(6-ம் பக்கம் பார்க்க)

## 50 ரூபாய் அபராதம்

யாழ்ப்பாணம், வியாழன்

கீரிமலையிலுள்ள உல்லா சப்பிரயாணிகள் ஹோட்டல் ஒன்றில் அனுமதியின்றி 'பியர்' பானம் விற்றதாகவும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக சாராயம் வைத்திருந்ததாகவும் நாகர் வைரமுத்து என்பவரை காங்கேசன்துறை இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி கைது செய்து மல்லாகம் கோர்ட்டில் நேற்று ஆஜர் செய்தார்.

எதிரியை குற்றவாளியாகக் கண்ட பதில் நீதவான் திரு. ஜி. எஸ். பாலசிங்கம் இரண்டு குற்றங்களுக்குமாக ரூ. 50 அபராதம் விதித்தார். பிடிபட்ட குடிவகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

அதே ஹோட்டலில் இரண்டு விவாகம் ஆகாத பெண்களையும் பொலிசார் சந்தேகத்தின் பேரில் விசாரித்ததாகவும், அவர்கள் தெரிவித்த தகவல்கள் திருப்திகரமாய் இல்லாமைபால் அப்பெண்கள் பற்றி புலன்விசாரணை செய்வதாகவும் அறியப்படுகின்றது.

## கவர்னர் ஜெனரல் இந்தியா செல்வார்

கொழும்பு, புதன்

இலங்கை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ, இம்மாதம் 21ந் தேதி இந்தியாவுக்கு விஜயஞ்செய்வார். அவருடன் அவரது பாரியாரும் செல்வார். கவர்னர் ஜெனரல் இந்தியாவில் நவம்பர் 2ந் தேதிவரை ராஜியப் பிரதிநிதியாகத் தங்கியிருப்பார்.

இந்திய ஜனதிபதி டாக்டர் சாகிர் ஹுசேன் விடுத்துள்ள ஓர் அழைப்பின் பேரிலேயே இலங்கை கவர்னர் ஜெனரல் அங்கு செல்கிறர்.

## இலங்கரத்ன, கெனமன் யாழ்ப்பாணம் வருகிறர்கள்

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணத்தில் நிலவிவரும் சாதிவேற்றுமைபற்றி அறியவும் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்களை நேரில் தெரிந்துகொள்ளும் பொருட்டும் இம்மாதம் 9-ந் திகதி எதிர்க்கட்சியைச் சேர்ந்த மூன்று பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்குவிஜயம் செய்யவிருக்கின்றனர்.

திருவாளர்கள்: ரி. பி. இலங்கரத்ன, லெஸ்லி குணவர்த்தன, பீட்டர் கெனமன் ஆகியோரைக் கொண்ட இக்குழு யாழ்ப்பாணத்தில் ஐந்துநாட்கள் தங்கியிருப்பார்கள்என அறியப்படுகிறது. இவர்கள் பிரசார கூட்டங்களிலும் கலந்து கொள்வார்கள்.

## விரல் அடையாள பரிசோதனை

யாழ்ப்பாணம், வியா.

தாலிக்கொடி களவு ஒன்று சம்பந்தமாக பொலிசாரால் கைது செய்யப்பட்ட பேரின்பநாயகத்தை 500 ரூபா பிணையில் செல்ல யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் அனுமதித்தார்.

இவரது கைவிரல் அடையாளங்களை பரிசோதனைக்கு அனுப்புமாறு உத்தரவிட்ட மாஜிஸ்டிரேட் மீண்டும் இவரை அடுத்த மாதம் 11-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார். [ந. நி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இவ்வுலகத்தை நன்கு பயன் படுத்தினுல் அவ்வுலகத்தை அடைதல் இயலும். நம் இயல்பை முழுமையாக்கும் வழி, உலகை அழித்து விடுவதன்று. அதற்கு அதிகமாக அதோடு சேர்ப்பதும், அதன் லட்சியத்திலும் உயர்ந்த லட்சியத்தை நாடச் செய்வதுமேயாகும்.

— நியூமன்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு புரட்டாதி 19உ(5-10-67)

## அரிசி கடத்தல்?

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்று கதையுண்டு. ஊருக்கு என்ன தீங்கு நேரிட்டாலும் அதற்குப் பிள்ளையார் கோவிலிலுள்ள அனுதையான ஆண்டிதான் காரணமென்று கூறி அவரைத்தான் பலரும் குற்றம் கூறுவராம்.

அதுபோல இலங்கையில் ஏதாவது பிரச்னை ஏற்பட்டால் அதற்குத் தமிழர் மீது பழிபோடுவது சில வட்டராங்களில் வழக்கமாகிவிட்டது. இப்போது இலங்கையில் அரசாங்கம் நடத்தும் அரிசி மில்லுக்குப் போதிய நெல் கிடைப்பதில்லையாம். காரணம் அரிசியெல்லாம் கள்ளத்தனமாக வடக்கு, கிழக்கு தமிழ்ப் பகுதிகள் மூலம் இந்தியாவுக்குச் செல்லுவதாகவும் பொலிஸ்அதிபர் இதுபற்றி விசேஷமாகக் கண்காணிக்கும்படி எல்லாப் பொலிஸ் ஸ்டேஷன்களுக்கும் எச்சரித்திருப்பதாயும், ஒரு கொழும்புப் பத்திரிகை கொட்டை எழுத்துக்களில் செய்தி பிரசுரித்துள்ளது.

நம் நாட்டில்அரிசிக்கும் உணவுக்கும் அதிகதட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இச்சமயத்தில், யாராவது உயிர்போன்ற அரிசியை பணஆசையைமுன்னிட்டு வெளிநாட்டுக்கு அனுப்புவதாயின் அது நாட்டுக்குச் செய்யும் துரோகச் செயலேயாகும். இது பெரிதும் கண்டிக்கத்தக்கது. ஆனுல் நாம் விசாரித்தஅளவில், மேற்குறித்த செய்திஆதாரமற்றதென்றும், பங்கீட்டு அரிசியின் அளவை ஒருகொத்தாகக் குறைத்தபின், உள்நாட்டில் அரிசிக்கான கிராக்கியும் விலையும் அதிகரித்துள்ளதாகவும், அதனுல் தனிப்பட்ட அரிசிமில் காரர்கள் வயல்களுக்கே நேரில் சென்று புசலுக்கு உத்தரவாதவிலையா 12 ரூபாய்க்கு மேலும் கொடுத்து நெல்வாங்கி, அரிசியாக்கி அதிகவிலைக்குவிற்பதாகவும் தெரிகிறது.

இந்தியாவிலே ஒரு கொத்து அரிசி சுமார் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிறதாம். அதுவும் தமிழக அரசின் திட்டப்படி ஒரு பெரியபடி [சுமார் இரண்டுகொத்து] ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்பட ஏற்பாடாகியுள்ளது. இலங்கையிலேயே அரிசிக்கு அதிகவிலை கிடைக்கையில், பல தடைகளையும் ஆபத்துக்களையும்மீறி யாரும் இந்தியாவுக்கு இதைக் கள்ளக்கடத்தல் செய்து குறைந்தவிலைக்கு விற்கமுற்படுவாரா என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அரசாங்க அரிசி ஆலைகளுக்குப் போதிய நெல்கிடைக்காவிடில் அதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து உத்தரவாத விலையைக் கூட்டியோ அல்லதுவேறு நடவடிக்கைகளை எடுத்தோ நிலைமையைச் சீர் செய்யவேண்டுமேயன்றி, 'பிள்ளையார் கோவில் ஆண்டி' மீது வீண் பழி பாவம் சுமத்தி துவேஷத்தைக்கிளப்பிவிடுவது எவ்விதத்திலும் நல்லதாகாது.

## நோர்வே சென்றுர்

யாழ்ப்பாணம், வியாழன் திரு. கோவைந்தசாமி கனகராஜா நோர்வேயில் தகரங்களில் உணவு வகைகள் அடைப்பது சம்பந்தமான தொழிற்பயிற்சி பெறுவதற்காக சென்ற மாதம்29-ந் திகதி 'காம்பேஜ்' என்ற கப்பலில் நோர்வே பயணமாஞர். யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த இவர் யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் அங்கு ஐந்து வருட பயிற்சி பெறுவார்.

## விவசாயிகள் குறை

அராலி, புதன்

சென்றமாதம் முதலாம் திகதியிலிருந்து தமக்கு வேண்டிய நெற் செய்கைக் கடனை வங்கிகள் மூலம் பெற்று உணவு உற்பத்தியைப் பெருக்கலாமென அரசாங்கம் அறிவித்திருந்தும் கடனுக்கு மனுப்பண்ணிய பல விவசாயிகளுக்கு இன்று வரை கடன் உதவி கிடைக்கவில்லையென அறியப்படுகிறது. இதனுல் உரமிடவோ விதை நெல் கொள்வனவு செய்யவோ முடியாத நிலையிலிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

### இன்றைய பலன்

5-10-67
வியாழக்கிழமை
(புரட்டாதிமாதம் 19உ)

நட்சத்திரம். சித்திரை பிற்பகல் 1.14 மேல் சுவாதி.

திதி - துதியை இரவு 10.12மேல் திருதியை.

சுபநேரம்- 7.32-9.02.

ராகுகாலம்- 1.32-3.02

மேஷம் - குடும்பத்தில் கொண்டாட்டம், குதூகல மிகுதி.

ரிஷபம் - காகிதக் கப்பலில் கரைசேரமுடியாது.

மிதுனம் - குருவின்ஆசி, கொள்கையில் வெற்றி.

கடகம் - தொழில் சமவிருத்தி, துணிவுவேண்டும்

சிங்கம் - வாழ்த்தும், வளமும் வகையுடன் வரும்.

கன்னி - ஆமைவேகம், ஊமைக்குணம்.

துலாம் - பிடிவாதம் வேண்டாம், பின் வருந்த நேரிடும்.

விருச்சிகம் - வார்த்தை ஜாலம், வசீகர மிகுதி.

தனுசு - வேதனைச் செய்தி, விழிகள் குளமாகும்.

மகரம் - மனையாட்சி மலரும், மகிழ்வுமுண்டு.

கும்பம் -புத்திரர்புகழ், புத்துணர்ச்சி.

மீனம்- அன்னியவாசம், அகாலபோசனம்.

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

# கொற்றவைக் கூத்து

— 'சேந்தன்' —

ஆனைத்தோல் முதுகிற் போர்த்து
அரையினிற் புலித்தோல்கட்டிக்
கானத்தின் எருமை தன்னின்
கருந்தலை மீது நிற்ப
வானத்துத் தேவர் எல்லாம்
வணங்குதல் செய்யா நிற்பர்
ஞானத்தின் கொழுந்தாய் வந்த
நன்மறை யாட்டி யென்னே?

கட்கமோர் கரத்திற் கொண்டே
கண்களிற் பொறிகள் சிந்த
வெட்டினை மகுடன் தன்னை
வெங்கலை தலைமேல் நின்றே
அட்டமா திக்கும் மற்றை
அமரரும் அயர்ச்சி நீங்கி
மட்டவிழ் மலர்கள் தூவி
வணங்கியே நின்ற தென்னே?

சங்கு சக்கரமுஞ் செய்ய
தாமரைக் கரத்திற் ருங்கிச்
சிங்கமீ தமர்ந்து கோபச்
செங்கனல் சிவக்க நோக்கிப்
பங்கயன் முதலாந் தேவர்
பயத்தினைப் போக்கல் செய்ய
மங்கைநல் லுருவாய் வந்தாய்
மாமறை யேத்தல் என்னே?

ஆயபொன் னரிச்சி லம்பும்
அமைந்த மேகலையு மார்ப்ப
மாயமா மவுணன் வீழ
மரக்கால் நின்ரு டுங்கால்
நேயமாந் தேவர் கண்டு
நெகிழ்ந்துதம் முவகை பொங்க
தூயமா மலர்கள் தூவித்
தோத்திரம் செய்த தென்னே?

கொற்றவைத் தாயே முன்பு
கொன்றையுந் துளவுஞ் சூடி
கற்பனைக் கெட்டா வண்ணம்
கரிந்மே யசுரர்ப் போக்கி
முற்படத் தேவர் வெற்றி
முரசினை யடிக்க வென்றே
அற்புத மலர்க்கால் நோவ
ஆடிய ஆட்டம் என்னே?

## உருளைக்கிழங்கு செய்கைபற்றி விவசாய அதிகாரி விளக்கம்

சங்கானை, புதன்

'விதை உருளைக்கிழங்கின் விலை உயர்வடைந்திருந்தாலும் கட்டுப்பாட்டு விலை இல்லாததால் கிழங்கின் விலை சுமார் ஓர் அந்தர் ரூபா 75 வரை நம்பிக்கையாக விற்கலாம். விளைவும் செலவும் ஒரே அளவில் இருந்தபோதிலும் கூடிய சுத்த லாபம் கிடைப்பதன் காரணம் உருளைக்கிழங்கின் இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளதே.'

இவ்வாறு உருளைக்கிழங்குச் செய்கை பற்றிய கருத்தரங்கு சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் திரு. எம்.கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது முக்கிய பேச்சாளராகக் கலந்து கொண்ட மாவட்ட கிருஷிக உத்தியோகஸ்தர் திரு. கே, என். ஜெயசீலன் கூறினுர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

காலபோக ஐப்பசி, கார்த்திகை, மார்கழிமாத கிழங்குச் செய்கைக்கு நிலத்தைத் தெரிவு செய்யவேண்டியது முக்கியம். மழைகாலமாதலால் நீர் தேங்காத நிலம் சிறந்தது. இப்பகுதியில் கிழங்கு நன்கு விளையுமென்பது எனது நம்பிக்கை. கடந்த வருடங்களில் கிழங்குச் செய்கையில் ஆர்வமுள்ளவர்கள் விளைவித்த கிழங்கிலிருந்து இதை நாம் அறியக் கூடியதாக விருக்கிறது.

பசளையிடல், பாத்திகட்டல், நீர்ப்பாய்ச்சல, கிருமிநாசினி அடித்தல் ஆகியவற்றை நன்கு விளக்கிய இவரிடம் பலரால் பலவிதமான கேள்விகள் கேட்கப்பட்டன.

வலி- மேற்குப் பிரிவில் இருந்து சங்கானை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, சுழிபுரம், தொல்புரம் ஆகிய இடங்களிலிருந்து பல பயிர்ச் செய்கைக் குழு அங்கத்தவர்களும், தனிப்பட்ட கமக்காரர்களும் கிருஷிக போதனுசிரியர் திரு. த். குமாரவேலும் அவ்வப்பகுதி விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

ஆசிரியருக்கு கடிதம்

## விவசாயக் கடனில் தாமதம்

விவசாயிகளுக்கு [தவணை தப்பிய கடன் உள்ள அங்கத்தவர்கள் உட்பட] அரசாங்கம் விவசாயக்கடன் ஏக்கர் ஒன்றுக்கு 220/- ரூபா வீதம் பணமாகவும், பொருளாகவும், அவ்வக் காலங்களுக்குத்தந்து உதவுவதாகப் பிரதமர் உட்படப் பல அதிகாரிகள் கூறிவந்தனர். ஆனுல் எல்லாம் பேச்சளவில்லாமல் செயலளவில் இல்லையென்றுதான் விவசாயிகள் எண்ணவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இன்றுவரை கிளிநொச்சிப்பகுதியில் எந்தச் சங்கங்களுக்கேனும் கடன் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. விவசாயிகள் கடனுளியாவதற்கு, நஷ்டமடைவதற்கும் முதற் காரணம் சங்கங்கள் வேண்டியகாலங்களில் கடனைக் கொடுக்காமல் அரிவிவெட்டும்போது உழவுகடன் ஆகியகடன்களை கொடுத்தலே. இராமநாதபுரமக்கள் சென்ற இரு போகமும் நெல்விளைவு இல்லாமல் பெருங் கஷ்டத்திற்குள்ளாகியிருந்தும் 1967 — 1968-ம் ஆண்டுகாலபோகம் செய்வதற்காக வேண்டிய நிலத்தைப் பண்படுத்தியுள்ளனர். அவர்களுக்கு விதை நெல் உழவுகடன் ஆகியன இல்லாமல் உரியகாலத்துக்கு விதைக்கமுடியாமல் காலம் கடந்துபோகின்றது. இது சம்பந்தமாக கிராமமுன்னேற்றச்சங்கங்கள், பயிர்ச்செய்கைக்குழுக்கள், சனசமூகநிலையங்கள். பலநோக்கு சங்கம் ஆகியன பிரதமருக்கும் சம்பந்தப்பட்ட பல அதிகாரிகளுககும், தந்திகள், கடிதங்கள் அனுப்பியும் இதுவரை எந்தவிதமான முடிவுகளும் அறிவிக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கூடிய விரைவில்விவசாயிகள் கடன்களைப்பெற வழிவகுப்பார்களா?

வே. கார்த்திகேசு
இராமநாதபுரம்.

## நாட்டிலும் நகரிலும்

பறக்கும் தட்டுகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா? கடந்த சுமார் இருபது ஆண்டுகளாக அமெரிக்கா முதல் அவுஸ்திரேலியா வரை நமது பூமியிலுள்ள பலர் அடிக்கடி இந்த விசித்திரமான வானவெளி தூதுவர்களைக் கண்டதாகக் கூறி வந்திருக்கிறுர்கள். தட்டை வடிவமான இந்த வஸ்துக்கள் இவ்வுலகத்தைச்சேர்ந்தவையா அல்லது புராணங்களில் கூறப்படும் பதினுன்கு 'உலகங்களை' சேர்ந்தவையா என்ற மர்மம் இன்று வரை புலனுகவில்லை.

இவற்றைக் கண்ட சிலர் கூறும் வரலாறுகளைப்பார்த்தால் அவை எங்கள் பூமியில் உற்பத்தியானவை என்று நம்ப முடியாமல் இருக்கிறது. அவை வரும் வேகமும் போகும் வேகமும் பிரமிக்கத் தக்கதாய் இருக்கிறது. அவை எங்கிருந்துதான் வருகின்றன?

மனிதன் சந்திரனை அடைவதற்கு எத்தனையோ விதமான ருெக்கட்டுகளையும் விண்வெளிக் கப்பல்களையும் அனுப்பியுள்ளான். சந்திரனுக்கு மட்டுமன்றி வெள்ளி செவ்வாய் முதலிய கிரகங்களைப் பார்த்துப் படம் பிடித்து வருவதற்கும் ஏவாயுதங்களை அனுப்புகிறுன். பூமியின் இழுக்கும் சக்தியையும்மீறி அவை அண்டவெளியில் வலம் வருகின்றன. சில வருடங்களுக்கு முன்பு நாம் இந்தச் சகசச் செயல்களைச் சிந்தித்தும் பார்க்க முடியுமா?

பூமியில் வசிக்கும் மனிதன் இப்படி விண்வெளியில் பிரயாணம் செய்யத் தொடங்கிய போது, நமது சூரிய மண்டலத்திலும் அதற்கும் அப்பாலுள்ள எத்தனையோ ஆயிரம் அண்ட சராசரங்களிலும் வசிக்கக்கூடிய ஜீவன்கள் எமது பூமியைப் பற்றி ஆராய்வதற்கு விமானங்களையும், கப்பல்களையும், பறக்கும் தட்டுகளையும் அனுப்பக்கூடுமல்லவா?

பூமியைத் தவிர வேறு கிரகங்களிலும்பிரபஞ்சத்திலும் உயிருள்ள ஜீவன்கள் இல்லை என்று வாதிப்பவர்களே இதை எதிர்ப்பார்கள். அங்கே எம்மைவிட நாகரீகமும் விஞ்ஞானமும் வளர்ந்துள்ள ஜீவர்கள் இல்லை என்பதற்கு என்ன அத்தாட்சி?

பறக்கும் தட்டுகள் வேறு கோளங்களிலிருந்து வரமுடியாது என்று கூறி அமெரிக்கவான சாஸ்திர விஞ்ஞானி வில்லியம் மார்க்கோவிட்ஸ் என்பவர் நியாயம் காட்டுகிறுர். "பல கோடி மைல் தூரத்திலுள்ள அண்டவெளி கோளங்களிலிருந்து பூமிக்கு வந்து, இங்கு தங்கியிருந்துவிட்டு, மறுபடி பூமியின் ஆகர்ஷண சக்தியையும் தாண்டிக்கொண்டு வெளியேறுவதற்குப் பிரமாண்டமான சக்தி தேவைப்படும். இது எமக்குத் தெரிந்த பௌதிக சாஸ்திரத்துக்கு முரண்பாடானது" என்று கூறுகிறுர் அந்த விஞ்ஞானி.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கிம் — திபெத் எல்லையில்

# ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை சீனா நிறுத்த வேண்டும்

## இல்லையேல் விளைவுகளுக்கு அதுவே பொறுப்பாகும்

### இந்தியா எச்சரிக்கை

புதுடில்லி, ஒக்டோபர் 4

கடந்த ஞாயிறன்று, சிக்கிம்—திபெத் எல்லையில் தோலா பகுதியில் இந்தியத் துருப்புகள் மீது சீனத் துருப்புகள் தாக்கியதை ஆட்சேபித்து, இந்தியா நேற்றுப் புதுடில்லியிலுள்ள சீனத் தூதரகத்திடம் ஓர் ஆட்சேபக் குறிப்பொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

சீனாவின் இத்தாக்குதல், 'முகாந்திரமற்றதும் மிருகத்தனமானதும்' என்று இந்தியா, தனது ஆட்சேபக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

**சீனாவே பொறுப்பு ஏற்கவேண்டிவரும்**

சிக்கிம்-திபெத் எல்லையில் சீனா, தனது ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென்றும், அங்குள்ள அதன் துருப்புகளைச் சுடுவதிலிருந்து அது தடை செய்ய வேண்டுமென்றும் இந்தியா சீனாவைக் கேட்டுக் கொண்டுள்ளது. இல்லையேல் அதற்கான விளைவுகள் யாவற்றுக்கும் சீனாவே பொறுப்பை ஏற்கவேண்டுமென்றும் இந்தியா குறிப்பிட்டுள்ளது.

சிக்கிம்—திபெத் எல்லை ஒரு வரையறுக்கப்பட்ட சர்வதேச எல்லை என்றும், அதைச் சீனா அங்கீகரித்துள்ளதாகவும் குறிப்பிட்ட இந்தியா, சென்ற ஜூலை மாதம் வரை அந்த எல்லைப் பகுதியில் சீனத் துருப்புகளின் நடமாட்டம் காணப்படவில்லையென்றும், ஜூலை 29-ம் திகதியிலேயே முதல் முதலாகச் சீனரின் நடமாட்டம் அங்கு அவதானிக்கப்பட்டதாகுமென்றும் தெரிவித்துள்ளது. பின்னர், கடந்த இரண்டு மாதங்களில், சீனத் துருப்புகள் அங்குநிலையங்களை அமைத்துத் தம்மைப் பலப்படுத்திக் கொண்டார்களென்றும் இந்தியா கூறியுள்ளது.

**எல்லையை இந்தியா பாதுகாக்கும்**

முதலில், நேதுலாவிலும், பின்னர், இப்போது தோலாவிலும் சீனத் துருப்புகள் தாக்குதலில் ஈடுபட்டதன் மூலம், சிக்கிம்—திபெத் எல்லையில் சீனா நெருக்கடிநிலைமை ஒன்றைத் தோற்றுவிக்க முயல்வதாக இந்தியா குற்றஞ்சாட்டியது. திரும்பத் திரும்பச் சீனா, ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதை இந்தியா பெரும்கவலையுடன் அவதானித்துவருவதாகவும் இந்தியாவின் ஆட்சேபக் குறிப்புத் தெரிவித்துள்ளது.

சிக்கிம் எல்லையின் பாதுகாப்புஇந்தியாவின் பொறுப்பாகுமென்றும், எல்லையில் நடத்தப்படும் ஆக்கிரமிப்பு எதையும்இந்தியா முறியடிக்குமென்றும் இந்தியா எச்சரித்துள்ளது.

## திரு. லோஹியா

புதுடில்லி, ஒக். 4

சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் புதுடில்லி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இந்திய சோஷலிச கட்சித் தலைவரான டாக்டர் ராம் மனோகர் லோஹியா, இப்போது படிப்படியாகக் குணமடைந்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரத்த அமுககத்தினாலும், பலவீனமான இருதயத்தினாலும் பீடிக்கப்பட்ட டாக்டர் லோஹியாவுக்கு நேற்று சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

டாக்டர் லோஹியாவை, உள்துறை மந்திரி திரு. சவான், நேற்று முன்தினம் ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தார்.

நேற்றுத் திடீரென்று மோசமடைந்த திரு. லோஹியாவின் உடல்நிலை, பின்னர் தணிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்திய

## பார்லிமெண்ட் தூதுக்கோஷ்டி

### அவுஸ். பிரதமரை சந்தித்தது

கான்பரா, ஒக். 4

அவுஸ்திரேலியாவுக்குத் தற்போது விஜயஞ்செய்யும் இந்திய பார்லிமெண்டரி தூதுக்கோஷ்டி, நேற்று அவுஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹோல்டைச் சந்தித்துப் பேசியது.

அவுஸ்திரேலியாவுக்கு வந்திருந்த நியூசிலாந்துப் பிரதமர் திரு. ஹோலிஓக்கையும் தூதுக்கோஷ்டியினர் நேற்று இங்கு சந்தித்தனர்.

## மாஸ்கோவில் மன்னர் ஹுசெயின்

மாஸ்கோ, ஒக், 4

மாஸ்கோவந்துள்ள ஜோர்தான் மன்னர் ஹுசெயின் நேற்று ரஷ்யத் தலைவர்கள் பலரைச் சந்தித்துப் பேசினார்.

ஜோர்தானுக்குப் பரவலான உதவியைஅளிக்க ரஷ்யத் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளதாக மன்னர் ஹுசெயின் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீநகரில் பொலீசார் துப்பாக்கிப்பிரயோகம்

## இருவர் கொல்லப்பட்டனர்; 30 பொலீசார் காயம்

ஸ்ரீநகர், ஒக். 4

ஜம்மு-காஷ்மீரின் தலைநகரானஸ்ரீநகரில், சிலபகுதிகளில், 16 மணி நேர ஊரடங்குச் சட்டம் நேற்று விதிக்கப்பட்டது.

தடையுத்தரவை மீறிஊர்வலம் நடத்த முயன்ற ஒரு கும்பல், கல்வீச்சில்இறங்கியபோது, பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிஏற்பட்டது.

**இருவர் மரணம்**

பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 2 பேர் இறந்ததாகவும் ஒருவர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. மூப்பது பொலிசார் காயமுற்றனர். வண்டிகளும் சேதத்துக்காளாகின.

முன்னதாகக் கும்பலைக் கலைக்கப் பொலிசார் தடியடி கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனர்.

மாணவர்கள் கோஷ்டி ஒன்று ஊர்வலம் நடத்தத் தொடங்கியபோதே, தொல்லை ஆரம்பமாகியது என்றும், இத்தொல்லை நகரின் ஒரு சிறு பகுதிக்குள்ளே மட்டும் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் அரசின்

## பொருளாதாரக் கொள்கையை தொழிற்கட்சி மாநாடு ஏற்றது

ஸ்காபரோ, ஒக். 4

ஸ்காபரோவில் கூடியுள்ள பிரிட்டிஷ் ஆளும்கட்சியான தொழிற்கட்சி மாநாடு அக்கட்சியின் பொருளாதாரக் கொள்கையை, குறுகிய பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரித்துள்ளது.

மிகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்ட பிரதமர் வில்சனின் தலைமையிலான பிரிட்டிஷ் அரசாங்கத்தின்பொருளாதாரக் கொள்கைக்கு கட்சிமாநாட்டில்அங்கிகாரம் பெற்றுத்தருவதில் பிரிட்டிஷ் நிதி மந்திரி திரு. கல்லகமின் பங்கு குறிப்பிடத்தக்கது எனக் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையை மாநாட்டில் விளக்கி, அதை ஆதரித்துப் பேசியதன் மூலம், நிதி மந்திரி, அது தோல்வியடைவதிலிருந்து காப்பாற்றினார்.

# இந்திரா - காமராஜ் சந்தித்துப் பேசினர்

## மே. வங்காளம் பற்றி

புதுடில்லி, ஒக். 4


குஜராத்திலிருந்து தமது ஐந்து நாள் விஜயத்தின்பின் நேற்றுப் புதுடில்லிக்குத் திரும்பிய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரைச் சந்தித்துப் பேசினார். அவர்களிருவரும் மேற்குவங்காள நிலைமையை ஆராய்ந்ததாகக் கூறப்பட்டது. இவர்களின் சந்திப்பு 45 நிமிடங்களுக்கு நீடித்தது.

திரு. சவான், திரு. நந்தா, திரு. அத்துல்யா கோஷ் ஆகியோரையும் திரு. காமராஜ் சந்தித்தார்.

**'தவறில்லை'**

பின்னர், பத்திரிகையாளரிடம் பேசுகையில், மேற்கு வங்காளப் பிரதேச காங்கிரசுக்குப் பதிலாக ஒரு கமிட்டியை நியமிப்பது பற்றி இன்னும் ஒரு தினத்தில் இறுதி முடிவு எடுக்கவிருப்பதாகத் திரு. காமராஜ் கூறினார்.

தேவையான போது, ராஜ்யங்களிலுள்ள பிரதேச காங்கிரசுகளுக்குப் பதிலாகக் கமிட்டி ஒன்றை நியமிப்பதில் தவறெதுவுமில்லை என்றும் திரு. காமராஜ் தெரிவித்தார்.



# அமெரிக்க ஏவாயுத பாதுகாப்பு முறை

## பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி கண்டனம்

ஸ்காப்ரோ, ஒக் 4

சீனாவிலிருந்து வரக்கூடிய தாக்குதலை எதிர்பார்த்து, ஏவாயுத எதிர்ப்புமுறை ஒன்றை அமைக்க அமெரிக்கா தீர்மானித்திருப்பதைப் பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி திரு. டென்னிஸ்ஹீலி கண்டித்துள்ளார்.

ஸ்காப்ரோவில் ஆரம்பமாகியுள்ள பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் ஆரம்பக் கூட்டத்திற்குப் பின் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், அணுத் தாக்குதலிலிருந்து அமெரிக்காவைப் பாதுகாப்பதற்கே இந்த ஏவாயுத எதிர்ப்பு முறை என்பதற்கு ஆதாரமெதுவுமில்லை என்று கூறினார்.

மாஸ்கோவைச் சுற்றி அமைக்கப் பட்டுள்ள அணுப்பாதுகாப்புமுறைபோன்று அமெரிக்காவும் ஒன்றை உருவாக்க முயன்றால், அது கிழக்கு, மேற்கு ஆயுதப் போட்டி வேகத்தை [illegible] தப்படுத்தக் கூடுமென்று திரு. ஹீலி எச்சரித்தார்.

# அமெரிக்க வெளியுறவு மந்திரி ரஸ்க்கை இந்திய பாதுகாப்பு மந்திரி சந்தித்தார்

## வியட்னாம், மே. ஆசியா விவாதம்

நியோர்க், ஒக். 4

ஐ. நா. பொதுச்சபைக்கான இந்திய தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்கும் இந்திய பாதுகாப்பு மந்திரி சர்தார் சுவர்ண் சிங் நேற்று இங்கு அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க்கைச்சந்தித்துப் பேசினார். ஒரு மணி நேரம் வரை, இப்பேச்சு வார்த்தைகள் நீடித்தன.

வியட்னாம், மேற்குஆசியப் பிரச்னைகளும், ஆசிய நிலைமை, அண்டை நாடுகளுடனான சீனாவின் நிலையின் பின்னணியில், அண்மையில் சிக்கிம்-திபெத் எல்லையில் நடைபெற்ற மோதல் ஆகியவை, இருவரது பேச்சு வார்த்தைகளிலும் இடம் பெற்றன.

அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்கின் வேண்டுகோளின் பேரிலேயே, வியட்னாம் பிரச்னை, இப்பேச்சுவார்த்தைகளின் போது கிளப்பப்பட்டது. வியட்னாம் பற்றிய அமெரிக்க நிலையை திரு. ரஸ்க் [illegible]

[illegible] வியட்னாம் விவகாரம் சம்பந்தமாக, இந்தியாவின் நிலையைச் சர்தார் சுவர்ண் சிங் மீண்டும் வலியுறுத்தினார். வியட்னாம் பிரச்னையை படை நடவடிக்கைகளாலோ அல்லது போரைத்தீவிரப்படுத்துதலாலோ தீர்க்க முடியாதென்றும், வியட்னாம் சமாதானத்துக்கு முதற்படியாக அமெரிக்கா, வட வியட்னாம் மீதான குண்டு வீச்சை உடனடியாகநிறுத்த வேண்டுமென்றும் சர்தார் சுவர்ண்சிங், திரு. ரஸ்

[4-ம் பக்கம் பார்க்க]

மே. ஆசியாவில்

# பழைய எல்லைகளை நிறுவ முடியாது

## இஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. எபான்

நியூயோர்க், ஒக். 4

இஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. எபான், மேற்கு ஆசியாவின் பழைய எல்லைகள் அடியோடு நொறுக்கப்பட்டு விட்டதாகவும், அவற்றை மீண்டும் நிறுவுவதென்பது இயலாத காரியமென்றும் ஐ. நா. பொதுச் சபையில் கூறியுள்ளார்.

இஸ்ரேலை அரபு நாடுகள்

[4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'சமயஅறிவு குன்றுவதே ஒழுக்கக்கேட்டுக்குக்காரணம்'

கொழும்பு, புதன்

மாணவர்கள் மத்தியில் சமய அறிவு குன்றிவருவதே ஒழுக்கக்கேடு மலிவதற்குக் காரணமாக அமைந்துவருவதாகவும் இதனைத்தடுக்க கல்லூரிகளில் சமய அறிவு மிகுந்த ஆசிரியர்களைக் கொண்டு சமயபாடங்களை மாணவருக்குப் போதிக்க நடவடிக்கைமேற்கொள்ளப்படவேண்டுமெனவும்நேற்று கொழும்பில் நடைபெற்ற சர்வசமய காங்கிரஸ் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. முன்னாள் நீதியரசர் திரு. ஹேமா பஸநாயகா தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலைநாடுகளில் இருப்பது போல் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் தாம் கல்வி கற்கும்போது தமக்குத் வேவையான பணத்தை உழைத்துச் சம்பாதிக்கவும் இங்குவாய்ப் பளிக்கப்படவேண்டும்.

வகுப்பறைகளில் இப்போது மாணவர்கள் அதிகரித்துவருவதால்ஒவ்வொரு வகுப்பிலும்மாணவர்களின்தொகையைக்குறைத்துமேலும்ஆசிரியர்களை நியமிக்கவேண்டும்.

பொதுவைபவங்களில்உடைவகைகள் உட்பட சகல விஷயங்களிலும் எளியமுறையைக் கடைப்பிடிக்கும் வழக்கம் பரப்பப்படவேண்டும்.

## செபமாலைத் திருநாள்

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலை சென் ஜேம்ஸ் ஆலயத்தில் செபமாலை மாதா திருநாள் இம் மாதம் 8ம திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட விருக்கிறது. இதற்காயத்தமாக நவ நாட்கள் இம் மாதம் 29 ம் திகதி ஆரம்பமாகும்.

## நாகர் கோயில் தபாற் சேவை

நாகர்கோயில், புதன்

நாகர்கோயில் உபதபாற் கந்தோரிலிருந்து இம்மாதம் 1-ம் திகதியிலிருந்து நாகர் கோயில் தரவை, நாகர் கோயில் வடக்கு, குடாரப்பு, குடாரப்பு கடற்கரைப்பகுதி ஆகிய இடங்களுக்கு தபால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது நாகர்கோயிலுக்கு வெகுவிரைவில் தொலைபேசி இணைப்புவசதிகளும் செய்யப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

# "சமுதாய வளர்ச்சியிலும் ஆசிரியர் பங்குகொள்ள வேண்டும்"

யாழ்ப்பாணம், வியா.

"ஆசிரியர் பாடசாலையிலும் மாணவர்களின் நலனிலும்கருத்துக்கொண்டு கடமையாற்றுவது போல சமுதாய வளர்ச்சியிலும் சமூக விவகாரங்களிலும் இரண்டறக்கலந்து பொது மக்களின் நன்மைக்குப் பாடுபடவேண்டும். இவ்வித இரு கடமைகளிலும் பண்டிதர் திரு. வ. நடராசன் கடமையைச்செய்து பலரது நன்மதிப்பையும் பெற்றிருக்கின்றூர் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை."

இவ்வாறு சுன்னுகம்ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் ஆசிரியர் மன்றத்தின் சார்பில் பண்டிதர் திரு. வ. நடராசனுக்கு நடாத்தப்பட்ட பிரியாவிடைக் கூட்டத்தில் கல்லூரி அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டார். பண்டிதர் திரு. வ. நடராசன் இக்கல்லூரியில் பல வருடங்களாகக்

[5-ம் பக்கம் பார்க்க]

## மீண்டும் பஸ் சேவை

சங்கானை, புதன்

நீண்டகாலமாக நிறுத்தப்பட்டிருந்த வலிகாமம் மேற்குப் பகுதி பாடசாலை பஸ் சேவை மீண்டும் இம்மாதம் முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

## அமெரிக்க...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

இடம் வலியுறுத்தினர்.

மேற்கு ஆசியப் பிரச்னை சம்பந்தமாக, அரபு நாடுகள் எந்த எந்த நடவடிக்கைகளை நியாயமானவை என ஏற்றுக்கொள்வார்கள். என்னென்ன வகைகளில் அரபுமக்களினது சுய மரியாதை காக்கப்படவேண்டுமென்ற விஷயங்கள் பற்றிச் சர்தார் சுவர்ண் சிங், திரு. ரஸ்க்இடம் விளக்கினர். அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் படைகள் வெளியேற வேண்டுமென்ற இந்தியாவின் நிலையையும் அவர் எடுத்துரைத்தார்.

ஆனல், படைநிலை பற்றிய இஸ்ரேலின் கொள்கையையே அமெரிக்கா ஆதரிப்பதாகத் திரு. ரஸ்க் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

### நிலைகளிருந்து விட்டுக்கொடுக்கவில்லை

வியட்னம், மேற்குஆசியப் பிரச்னைகளில் இரு தரப்பினரதும் கொள்கை நிலைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையென, நம்பத்தகுந்த ஆதாரங்களை மேற்கோள் வைத்து, இந்திய பிரெஸ் டிரஸ்ட் செய்தித்தாபனம் தெரிவித்துள்ளது.

## பழைய எல்லைகளை.....

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

அங்கீகரிக்க வேண்டுமென்பதற்காக இஸ்ரேல் அரபு நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த முயலவில்லையென்றும், இஸ்ரேலின் வாழும்உரிமை மறுக்கமுடியாதவொன்ருக இருப்பதாகவும் அவர் மேலும் கூறினர்.

புதிய எல்லைகளை வரையறுக்கவும், மேற்கு ஆசிய நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்புக்கு வழிகோலவுமே அரபு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேல் விரும்புவதாக திரு. எபான் அறிவித்தார்.


# 5

★ நீடித்து உழைப்பது
★ சௌகரியமானது
★ நவீனமானது
★ சிக்கனமானது

இந்த 5 சொற்கள்

எஸ்-லோன் பீலியை உருவாக்க உதவின

உறுதியான எஸ-லோன் பீவீசீ மழைநீர்ப் பீலிகள் நிரந்தர உழைப்பை நினைவில் வைத்துத் தயாரிக்கப்பட்டவை. உலோக மழைநீர்ப் பீலிகளை அரித்தழிக்கும் கறளுடன் கட்டியழும் பிரச்சினை, விழலுக்குப் பணத்தை வீணே விரயமாக்குவோருக்கே இனிச் சொந்தம்!

இலகுவில் பொருத்தக்கூடிய மழைநீர்ப் பீலி இது. இதைப் பொருத்த அதிக வேலையாட்கள் அவசியமேயில்லை. கறள் அரித்த உலோகப் பீலியைக் கழற்றி வீசும் அதேயளவு விரைவாக இந்தப் பீலியைப் பொருத்தி விட முடியும்.

நவமான வீடுகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும். அவற்றின் புதுப் பாணிக்கு உகந்த அழகு வளைவுள்ள எஸ்-லோன் பீலிகளைப் பொருத்துவதே பொருத்தம். பழைய பத்தாம் பசலியான விலை கூடிய உலோக வடிகால் ரகப் பீலிகளுக்கு விடை கொடுங்கள். உங்கள் கட்டிடங்களுக்கு எஸ்-லோன் கொண்டு உன்னதமான புது மெருகூட்டுங்கள்.

நாளது வரை, மழைநீர்ப் பீலிகளில் மகத்தான இலாபக் கொள்முதல் எஸ்-லோன். இடி மின்னல் அடை மழைக்குப் பின் இடைக்கிடை பீலி மாற்றும் இடர்ப்பாடுகள் இனி இல்லை. அந்தக் கவலையை விட்டொழிக்க விரும்புவோர்க்கென்றே தயாரானது எஸ்-லோன்!

எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த இலவச தொழில் நுட்ப ஆலோசனையினதும் சேவையினதும் ஆதாரம் கொண்டது.

மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிட்டட்

MOP-72


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மனேஜர்

யாழ்ப்பாடிஐக்கிய பண்ட சாலேக்கு ஒரு மனேஜர் தேவை. S. S. C. சித்தி, கூட்டுறவுப் பாடசாலேப் பயிற்சி, ரூபா 1000/-ரொக்கப் பிணே தேவை. வயது 20-க்கு மேலும் 35-க்குள்ளும். விற்பனையாளனே அவரே கொண்டுவருதல் வேண்டும். மனுதாரரின் சொந்தக் கையெழுத்தில் மனுக்கள் 10-10-67-க்கு முன் கிடைக்கப்பெறுதல் வேண்டும். து. சீனிவாசகம், கௌரவ காரியதரிசி. 71, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2212

### கல்வி

வகுப்புகள்

B. A. G. A. Q, G. C. E. (A. L.) ஆகிய வகுப்புக்கள் 11-10-67-ல் ஆரம்பமாகின்றன. புவியியல், வரலாறு. தமிழ், அரசியல், சமஸ்கிருதம், பொருளாதாரம், தூய கணிதம், பிரயோக கணிதம் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. யாழ்ப்பாணக் கல்வி நிலேயம், (JAFFNA EDUCATION CENTRE), 304/3, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2213

### வாடகைக்கு

வீடு

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியில், படுக்கை அறைகள், இரண்டு ஸ்ரோர்ரூம் கொண்ட மின்சார வசதியுள்ள வீடு பிரயோசனங்களுடன் வாடகைக்கு உண்டு. பள்ளிக்கூடம், புகையிரதநிலேயம், பஸ்தரிப்பு நிலேயம் முதலியவற்றிற்கு அண்மையில் உள்ளது. விபரங்கட்கு திருமதி எஸ். ரத்தினம், 669, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2208

## யோகர் ஞாபக பிரார்த்தனே

பம்பலப்பிட்டி, புதன்

யோகர் சுவாமிகள் ஞாபகார்த்தப் பிரார்த்தனேக் கூட்டம் சென்ற சனிக்கிழமை பம்பலப்பிட்டிசரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. ராமகிருஷ்ண மடத் தலேவர் சுவாமி பிரமாத்மானந்தாவும் இதில் கலந்துகொண்டார்.

தீவுப்பகுதி

## வாலிப முன்னணி கோரும்

யாழ்ப்பாணம், வியா.

மற்றைய இடங்களிலும் பார்க்க தீவுப்பகுதிப் பிரயாணிகளிடம் இ. போ. சபையினர் அதிககட்டணம் வசூலிப்பதை தீவுப் பகுதிப் பொதுஸ்தாபனங்களும் எம். பி. யும், வாலிப முன்னேற்றச் சங்கமும் பல தடவையும் எடுத்துச் சொல்லியும் பயனற்றுப்போனதால் அதனே ஆட்சேபித்தும், தீவுப்பகுதியில் நிலவும் நிரந்தர குடிநீர்த் தட்டுப்பாட்டுப் பிரச்னேயை பரந்த அடிப்படையில் குழாய்நீர்த்திட்ட அடிப்படையில் தீர்க்கவேண்டுமெனக்கோரியும், விவசாயிகள் தொழிலாளர்கள், வர்த்தகர்களின் நன்மை கருதி தீவுப்பகுதியில் மக்கள் வங்கிக்கிளேயொன்று நிறுவப்படவேண்டுமெனக் கோரியும் தீவுப்பகுதி வாலிபமுன்னேற்றச்சங்கம் பரந்தஅடிப்படையில் ஒரு பொதுக் கூட்டம் நடத்த ஒழுங்குகள் மேற்கொண்டுவருகிறது.

(நி.)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

[செய்திகள்:-காலே 7-00, பகல் 12-45, மாலே 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர்

காலே 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவசிந்தனே—சிவா. ஜகந்நாதன், 6-40 இஸ்லாமிய நற்சிந்தனே, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 8-00 நிலேயஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்ள்.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

மாலே 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல் வகை.

இரவு 6-15 ஜலதரங்கம், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பவளம், 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 கலேக்கோலம், 10-15 தேர்ந்த இசை.

## சமுதாய...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கடமையாற்றி அரசாங்க பாடநூற் பிரசுர சபையின் தமிழ்ப்பகுதிக்கு நிரந்தர உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டதையொட்டி நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆசிரியர் வித்துவான் திரு. சி. ஆறுமுகம் உட்பட பலர் பேசினர்.

மன்றஉபதலேவர் திரு. சி தியாகராசா தலேமையில்நடந்த இக்கூட்டத்தில் பண்டிதர் வ. நடராசனுக்கு மன்றத்தின் சார்பில் பணமுடிப்பும் வழங்கப்பட்டது.

## சிறைச்சாலேயுள் கைதிகள் காயமுற்றனர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் சிறைசசாலேயிலுள்ள கைதிகளுக்குள் நடைபெற்ற கைகலப்பொன்றில் 3கைதிகள் காயமுற்ருர்கள்.

காயமடைந்த சாள்ஸ்சில்வா, அலிராசா, பொன்சேகா ஆகிய மூவரிலும் சாள்ஸ் சில்வா படுகாயமடைந்துள்ளதாகவும், அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. இதுசம்பந்தமாக சிறைச்சாலே சுப்ரின்டன்ட்திரு. ஜயன்ற் விசாரணே நடத்தி வருகிருர்.

[ந. நி.]

## JAFFNA COLLEGE

**Undergraduate Department**

GSQ } Courses have been
GAQ } formed.


Further admissions can be made. Admission also open o those who have passed he London Adv. Level examination.

Enquiries From:

The Registrar
Vaddukoddai. 279

யாழ்ப்பாணம், வியா.

கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலேய முன்றலில் இலங்கைஅரசாங்க சேவைத் தகவல்பகுதியினரால் இன்று மாலே 6-30 மணிக்கு இலவச படக்காட்சியொன்று காண்பிக்கப்படும்.




## விளம்பரம்

## பேன் நிவாரணி

### LICE DESTROYER

1. பேன் தொல்லேயால் உபவாதைப்படும் பெண்மணிகளுக்கும் சிறுபிள்ளேகளுக்கும் நிவாரணம் அளிக்க டாக்டர் வை. சுப்பிரமணியத்தின் பேன் நிவாரணியைபாவியுங்கள். மருத்துவ ஆலோசனேப்படி விஷேசமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இம்மருந்து பாவனேயாளருக்கு எவ்வித கெடுதலும் இன்றி 12 மணித்தியாலத்திற்குள் பேன்களேக்கொன்று கடியினின்று நிவாரணம் அளிக்கக்கூடியது.

பாவிக்கும் முறை: தலேமயிரை நன்ருகக் கழுவிய பின்னர் இந்த என்வலப்பிற்குள் இருக்கும் நான்கு சீலேத்துண்டுகளேயும் தலேமயிருக்குள் நாலு இடத்தில் வேருக வைத்து கட்டியபின்னர் வெள்ளேப்படுக்கையில் படுத்து வழக்கம்போல் நித்திரை செய்யவும்.

காலேயில் பேன்கள் செத்துவிடும். பின்னர் சீயாக்காய் அரைத்து முழுகி விடவும்.

**விலே ரூபா ஒன்றுதான்.**

2. மனேன்மணி கிரந்தி எண்ணே: 300 வருடங்களாக பிரசித்தியுடன், புகழ்பெற்றுவரும் கிரந்தி எண்ணே பிறந்தநாள் முதல் சிறு குழந்தைகளுக்கு ஆறுவயது வரை பாவிக்கக்கூடியது.

3. இப்பொழுது நாடுபூராவும், விற்பனேசெய்யப்பட்டு வரும், இவ் இருமருந்துகளேயும் யாழ்ப்பாணக்குடாநாட்டில் விற்பனே செய்வதற்கு இரு பெண் விற்பனேயாளர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் டாக்டர் V. சுப்பிரமணியம், ஆயுள்வேத வைத்திய சாலே, கல்வியங்காடு என்ற விலாசத்திற்கு நேரில் விண்ணப்பிக்கவும்.

4. சகல விஷவைத்தியங்களும், கட்டு, கண்டமாலே, வைத்தியங்களும் செய்யப்படும்.

5. கல்வியங்காடு ஆயுர்வேத வைத்தியசாலேயிலும் சகல மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலலசேகராவுக்கு எஸ். ஜே. வி. கடிதம்

## கனிஷ்ட பல்கலைக்கழக வயதுக்கட்டுப்பாடு பற்றி

கொம்பனித்தெரு, புதன் ''சர்வ கலா சாலையில் சேரும் மாணவர்க்கு வயதுக் கட்டுப்பாடில்லாது இருக்கும்போது, கனிஷ்ட சர்வ கலாசாலையில் சேர்வதற்கு வயதுக்கட்டுப்பாடு ஏன் விதிக்கப்பட்டுள்ளது?'' என்று தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தேசிய உயர் கல்விச் சபைத்தலைவர் திரு. ஜி. பி. மலலசேகராவைக் கேட்டுள்ளார்.

கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு 17க்கும் 25 வயதுக்குமிடையே வயதுக்கட்டுப்பாடு விதித்திருப்பதை ஆட்சேபித்து எழுதியுள்ள கடிதமொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த வயதுக்கட்டுப்பாட்டினுல் திறமையான மாணவர்கள் சேரமுடியாமலிருப்பதாகவும், இந்தவயதுக்கட்டுப்பாட்டை நீக்கவேண்டுமென்றும் திரு. செல்வநாயகம் தேசிய உயர்கல்விச் சபைத்தலைவரை தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

## நாட்டிலும நகரிலும

2-ம் பக்கத் தொடர்ச்சி

எமக்குத் தெரியாத நாம் அறியாத, எத்தனை விதமான சக்திகள் பிற அண்ட கோளங்களில் இருக்கின்றனவோ? இருக்கிறது, இல்லை என்பதை ருசுப்படுத்தியவர் யார்?

மூவாயிரம் ஆண்டுக்குப் பின் 1945-ல் தானே அணு சக்தியை நாம் கண்டு பிடித்தோம்? மின்சாரம், அணு சக்தி, எக்ஸ்றே போன்ற இன்னும் எத்தனை எத்தனை சக்திகள் இப்பூமியிலேயே இருக்கின்றனவோ?

பூமியைத் தவிர்ந்த ஏனைய கிரகங்களிலும் அண்ட கோளங்களிலும் நாம் இதுவரை கண்டும் கேட்டும் இராத புதிய சக்திகளும் புதிய ஜீவராசிகளும் இருக்கக் கூடுமென்பதை மறுக்க முடியுமா?

காணாத ஒன்றை துப்புரவாக இல்லை என்று சொல்லலாமா?

— வழிப்போக்கன்

## இடமாற்ற . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதி வித்தியாதிபதி இச் சங்கப் பிரதிநிதிகளுக்குமட்டும் இந்தச் சலுகை அளிக்காதது பாரபட்சமானதென்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர்களை அரசாங்கம் 'பகடைக் காய்களாக' நினைத்து அடிக்கடி இடமாற்றம் செய்வதால் கல்வித் தரமும், பாடசாலைகளின் தரமும் குன்றுவதால் இப்படியாக இடமாற்றம் செய்யவேண்டாமென்ன அரசாங்கத்தைக் கோருவதென்ற தீர்மானமும் இங்கு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ந.நி)

## புதிய சம்பளசபை

யாழ்ப்பாணம், வியா. நெல் அரைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 7000 தொழிலாளர்களின்சம்பளம், வேலைவசதி இவற்றைக் கவனிக்க ஒரு புதிய சம்பளசபை அமைக்கப்பட்டுள்ளது.

## பாய்ச்சல் வீரர் பல்லிழந்தார்

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் சனசமூக நிலையங்களுக்கிடையேயாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் கலந்துகொண்ட ஒருபாய்ச்சல்வீரர் உயரம்பாய்தல் போட்டியில் கலந்துகொண்ட சமயம் நூறுரூபாவுக்கு மேல் பெறுமதியான தனது இரண்டுதங்கப்பற்களை இழந்தார். [வி.நி.]

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உதைபந்தாட்டப்போட்டியில் இன்று மாலை யாழ் மத்திய கல்லூரியும், யாழ். இந்துக் கல்லூரியும் [ஏ பிரிவு] மோதும். [வி.நி]

## வடக்கால் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவை கடத்தப்படுவதாக கூறுவது ஆதாரமற்றதென்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

பிரதமரின் உத்தரவிற்கிணங்க ஆனையிறவில் பொலிஸ், இராணுவ, உணவுக் கட்டுப்பாட்டிலாகாவினர் கூட்டாகவும், புகையிரதப் பகுதியில் பொலிசாரும் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் பரிசோதனை செய்துவருவதாகவும், இந்தப் புள்ளிவிபரங்களிலிருந்து வடபகுதிக்குவரும் நெல் அரிசி, பால்மா என்பன இப்பகுதிக்கே போதுமானதாகவிருப்பதாகவும் பொலிஸ் சுப்பிரின்டன் அறிவித்துள்ளார்.

# இறந்தவர் தினமும் 5 போத்தல் கள் குடிப்பாராம்

## அளவெட்டிக் கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா 'இறந்தவர் எனது வீட்டிற்குத் தினமும்கள் குடிக்க வருவார். தினமும் காலையில் 3 போத்தல் கள்ளும் மாலையில் 2 போத்தல் கள்ளும் குடிப்பார். அவர் இறந்ததற்கு முதல் நாளிரவு நானும், மனைவியும், எனது மச்சான் கந்தசாமியும், சகோதரி பூமணியும், இறந்தவருமாக எதிரியின் காரில் யாழ்ப்பாணம் சென்று 'தாழம்பூ' படம் பார்த்தோம். படத்தால் வந்த பின்னர் நாங்கள் வீட்டில் இறங்கிவிட்டோம். இறந்தவர் எதிரியின் காரிலேயே சென்றுர். அடுத்த நாள் காலையில் வேள்வி ஒன்றிற்குப் போக வருவதாக என்னிடம் சொல்லிவிட்டுச் சென்றுர்.''

மேற்கண்டவாறு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற அளவெட்டி கொலை வழக்கில் சாட்சியமளித்த மாணிக்கம் தெரிவித்தார்.

நீதியரசர் திரு. வி மாணிக்கவாசகர் முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கில் 1966ம் ஆண்டு ஜூலை மாதம் 2ந் தேதி சுப்பிரமணியம் சிவகுருநாதன் என்பவரைக் கொலைசெய்ததாக சின்னத்துரை தர்மலிங்கம் என்பவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர்கள் எஸ். அமிர்தலிங்கம், சி. பரமசிவம்பிள்ளை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் கே. உலகநாதனும் முடிக்குரிய தரப்பில் அட்வகேட் கே. இரத்தினேசரும் ஆஜராணுர்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞரால் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

இறந்தவரைப் பரிசோதனைசெய்த டாக்டர் சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் அவரது உடலில் 16 வெளிக் காயமும், 9 உள் காயமும் இருந்ததாகத் தெரிவித்தார்.

உடல் பரிசோதனை உதவி நிபுணர் எஸ். சபாநடேசன், பூமணி, லூர்த்தம்மா ஆகியோரும் சாட்சியமளித்தனர். இன்று காலை 9-15 மணிக்குத் தொடர்ந்து விசாரணை நடைபெறும். [ந. நி.]

## புதிய பஸ்சேவை

குரும்பசிட்டி, புதன் காங்கேசன்துறை எம். பி. யின் முயற்சியைத் தொடர்ந்து இ.போ.ச. புன்னாலைக் கட்டுவன்-கீரிமலை புதிய பஸ் சேவை ஒன்றினை இம்மாதம் முதல் ஆரம்பித்துள்ளது. இதனுல் குப்பிளான், குரும்பசிட்டி, கட்டுவன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பெரிதும் பயனடையக் கூடியதாகவுள்ளது. இச்சேவை புன்னாலைக்கட்டுவன் வடக்கிலிருந்து ஆரம்பித்து குரும்பசிட்டி, கட்டுவன், தெல்லிப்பழை, கொல்லங்கலட்டி போன்ற கிராமங்களின் ஊடாக கீரிமலை வரை நடைபெறும்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சபைத் தேர்தல் சம்பந்தமாக இலங்கை திரும்பிய பின் அறிவிப்பார். அதன் திகதி அறிவிக்கப்படும்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி விழா 3-ம் நாளாகிய இன்று இரவு 7 மணிக்கு வசந்த மண்டப பூஜையும். அன்ன வாகனத்தில் அலங்கார காட்சியும் நிகழும்.

## பேர்ஸ் யாருடையது

யாழ்ப்பாணம், வியாழன் வெலிங்டன் படமாளிகையடியில் பேர்ஸ் ஒன்றுடன் கண்டக்டர் பதக்கமும் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கல்வி அமைச்சின்

## நிரந்தரக் காரியதரிசி யாழ். வருகிறுர்

குரும்பசிட்டி, புதன் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும் கல்விமா அதிகாரியுமான திரு. எம். ஜே. பெரேரா இம்மாதம் 17ம் திகதி உத்தியோக ரீதியில் யாழ்ப்பாணம் வருகின்றுர். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் திரு. பெரேரா இக் கல்லூரியின் புதிய வகுப்பு அறைகளைக் கொண்ட கட்டிடமொன்றினையும் திறந்து வைப்பார் எனத் தெரிகிறது.

## டாக்டர்மீது புகார்

யாழ்ப்பாணம், வியாழன் சிறைக் கைதிகளை வைத்திய பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்ற சிறைக்காவலர் ஒருவர், ஆஸ்பத்திரி டாக்டர் ஒருவரினுல் தூஷிக்கப் பட்டாராம். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட காவலாளர்மேலிடத்துக்குப் புகார்செய்துள்ளார். (ந.நி.)

## வீட்டில் திருட்டு

சாவகச்சேரி, புதன் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிமன்ற அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் வீட்டில் கடந்த இரவு ரூபா 500க்கும் கூடுதலானமதிப்புள்ள பொருட்கள் திருட்டுப்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கச்சாயிலுள்ள இவரது வீட்டில் நடைபெற்ற இத்திருட்டுக் குறித்து இன்னும் எவரும் கைதுசெய்யப்படவில்லையென்றும் தெரியவருகிறது.

## மலேசியாவில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களும் பிரதமர் சேனநாயகாவை விமானநிலையத்தில் வரவேற்றுர்கள்,

பிரதமர் டட்லிக்கு மலேசியா ராணுவம் மரியாதை அணிவகுப்பொன்றை நடத்தியது. அதன் பிறகு பிரதமர் ராஜபவனியாக அழைத்து செல்லப்பட்டார். நாளைய தினம் பிரதமர் டட்லி மலேசிய பிரதமருடனும், பிரமுகர்களுடனும் உலக, மற்றும் பொது விஷயங்கள் பற்றி ஆலோசனைகள் நடத்துவார்.


2-வது ஜனத்திரள் வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] — பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

விஜயா [மட்டுநகர்] — ஸ்ரீகிஷ்ணு [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

ராஜ் [நீர்கொழும்பு]

மற்றும் 4 திரைகளில்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனுதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனு - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்



REGAL JAFFNA
Time: 4-45 7-00 p. m. 9-45 p. m.
Roger Browne & Scillagabel
in
M. G. M's
7 Slaves against Rome
[Technicolor]

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
Roger Hanin
Margaret Lee
in
AN ORCHID FOR A TIGER
A Secret Agent Film in Color

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
என். டி. ராமராவ்
நடித்த
ராஜ மகுடம்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45, 7-00 & 9-45
NEVADA SMITH
(Cinemascope)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org